# கதர் மற்றும் கிராமத் தொழில்கள்

**மானியக் கோரிக்கை எண்.18**

# அறிவிப்புகள்

**2012 – 2013**

**பூ.செந்தூர் பாண்டியன்**
**கதர் மற்றும் கிராமத் தொழில் துறை அமைச்சர்**

## தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

### 1. கதர் தொழிலை ஊக்குவித்தல்

கிராமப்புற ஏழை மக்கள் அதிக அளவில் ஈடுபட்டுள்ள கதர்த் தொழிலினை ஊக்குவித்து அவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்திட வேண்டும் என்ற உயரிய எண்ணம் கொண்ட **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** கதர் உற்பத்தியை அதிகரிக்க, வாரியத்திற்கு ரூ.10.00 கோடி வழிவகை முன்பணம் அரசால் அனுமதிக்கப்படும்.

## 2. தேனீ வளர்ப்பு தொழிலை சமவெளிப் பகுதிகளில் பிரபலப்படுத்துதல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** தோட்டக்கலை உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் வாரியம் சமவெளிப் பகுதிகளில் தேனீ வளர்ப்புத் தொழிலை பிரபலப்படுத்த நடவடிக்கை எடுக்க உள்ளது. இதன் முதற்கட்டமாக 440 விவசாயிகளுக்கு 4400 தேனீ குடும்பங்களை உருவாக்கிட ரூ.100.00 இலட்சம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.



## 3. கிராமத்தொழில் கைவினைஞர்களுக்கு பயிற்சி அளித்தல்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** தச்சு மற்றும் கருமாரத் தொழில், தோல் தொழில் மற்றும் கையினால் செய்யப்படும் உணவுப் பொருள் போன்ற கிராமத் தொழில்களில் ஈடுபட்டுள்ள 1000 கைவினைஞர்கள் / சுய உதவிக் குழுக்களுக்கு பயிற்சி அளிக்க இவ்வருடம் கதர் கிராமத் தொழில் வாரியம் நடவடிக்கை எடுக்க உள்ளது.

## 4. வாரியத்தின் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களை புனரமைத்தல்

கதர் மற்றும் கிராமத் தொழில் நடவடிக்கைகளுக்கு தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் ஆதாரமாக உள்ளன. **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** தொழிற்கூட்டுறவுச் சங்கங்களை புனரமைக்க படிப்படியாக நடவடிக்கை எடுக்கப்படும். இதன் முதற்கட்டமாக ரூ.30.00 இலட்சம் செலவில் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 6 தொழிற்கூட்டுறவுச் சங்கங்களை புதுப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.



## 5. கதர் விற்பனை நிலையங்களை புதுப்பித்தல்

கதர் மற்றும் கிராமத் தொழில் நடவடிக்கைகளுக்கு கதர் விற்பனை நிலையங்களும் ஆதாரமாக உள்ளன. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க** கதர் மற்றும் கிராமத் தொழில் ஆணையரகத்தின் உதவியுடன் மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப அனைவரையும் கவரும் வண்ணம் கதர் விற்பனை நிலையங்களை புதுப்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது..

## 6. பணிப்பாதுகாப்பு

வாரியத்தில் பணியாற்றிய 719 பணியாளர்கள் மிகைப் பணியாளர்கள் என அறிவிக்கப்பட்டதில், 461 பணியாளர்கள் அரசின், பிறத்துறைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள், வாரியத்தில் பணியாற்றிய பணிக்காலங்களை பாதுகாக்கும் வகையில், **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** அப்பணிக்காலங்களை, அவர்கள் பணிபுரியும் துறையில் ஓய்வூதிய பயன்களுக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.



## 7. கதர் வாரிய ஓய்வூதியதாரர்களின் இடர் நீக்குதல்

01.10.2008 முதல் 31.3.2012 முடிய பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ள தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியப் பணியாளர்களின் சிரமங்களை கருத்தில் கொண்டு **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,** நிலுவை ஓய்வூதிய பயன்கள் வழங்க ரூ.36.86 கோடி அரசால் அனுமதிக்கப்படும்.

**பூ.செந்தூர் பாண்டியன்**
**கதர் மற்றும் கிராமத் தொழில் துறை அமைச்சர்**